3rd November 1958]

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், குடியாத்தம் தாலுக்காவிலே உற்பத்தி செய்யப்படும் பட்டு மைசூர் ராஜ்யத்திலிருந்து வரக்கூடிய பட்டை விடச் சிறந்தது என்று அதிகாரிகள் ரிப்போர்ட் செய்திருப்பது தெரியுமா ? அங்கே நமது ராஜ்யத்திற்குத் தேவையான பட்டை உற்பத்தி செய்வதற்கு அபிவிருத்திகள் செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

Government Harijan Hostel at Tiruvannamalai

*820-H *Q*—SRI P. S. SANTHANAM : கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில், சர்க்காரால் நடத்தப்பட்டு வரும் ஹரிஜன ஹாஸ்டலில் 50 பிள்ளைகள் சேர்ந்து படிப்பதற்கு அனுமதி தரவேண்டுமென்று சர்க்காருக்கு மனு வந்ததா ?

(ஆ) அதன் பேரில் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) No petition has been received by the Government. A proposal to increase the strength of the Aruna Hostel at Tiruvannamalai from 33 to 50 is however under the examination of the Director of Harijan Welfare in consultation with the District Welfare Officer, North Arcot.

Quarters for Police Subordinate Staff of Sirkali Police Station

*820-I *Q*—SRI C. MUTHIAH : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சீர்காழி போலீஸ் நிலையம் சிப்பந்திகளுக்கு விடுதிகள் எப்போது கட்டப்படும் ?

(ஆ) எவ்வளவு தொகை ? எத்தனை விடுதிகள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The construction of quarters for the Police Subordinate staff at Sirkali Police Station has already been taken up.

(*b*) The cost of construction is estimated at Rs. 1,22,200. Quarters will be provided for one Sub-Inspector, 4 Head Constables and 19 Police Constables.

Fire Service Stations

820-J *Q*.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether a list of priority for the location of new fire service stations has been prepared;

(*b*) whether there is any proposal to revise the same in the light of the subsequent happenings in places like Perambalur and Udaiyarpalayam taluks in Tiruchirappalli district; and

(*c*) whether Perambalur or Ariyalur will be given top priority?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The revised priority list for location of new Fire Stations was prepared by the Inspector-General of Police, Fire Service Branch, in March 1958.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

[3rd November 1958

SRI S. LAZAR : Is it so rigid and could it not be reviewed in view of the recent happenings in Tiruchirappalli district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no rigidity about it. Government have been revising the priority list. But the limitations of finance is the main difficulty. In the list drawn up there are eight stations and Udaiyarpalayam does not find a place in that list.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இந்தப் பட்டியல் [போலீஸ் அதிகாரி அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் அநேக இடங்களில் தீயணைக்கும் படை ஏற்படுத்தப்பட்டிருக்கிறபோதிலும், சேலம் ஜில்லா மிகப் பெரிய ஜில்லா, ஜனத்தொகை மிகுந்த ஜில்லா, இங்கே ஒரேயொரு இடத்தில் மாத்திரம், மற்ற ஜில்லாக்களில் 7, 8 என்று இருக்கும்போது, இங்கே ஒரே இடத்தில் மாத்திரம் வைக்கக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தீ விபத்துக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு இந்த லிஸ்ட் தயாரிக்கப்படுகிறது. சேலம் ஜில்லாவிலே அதிகத் தீ விபத்துகள் இல்லையென்றால் கனம் அங்கத்தினர் பெருமைப்படவேண்டும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : What is the basis on which these fire stations are opened? Is it on the basis of population or number of fire accidents or what?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Particularly fire risks involved are taken into account. It is not merely population.

SRI A. R. SUBBIAH MUDALIAR : On a point of order, Sir, சனிக்கிழமையன்று என்னுடைய 789-ம் கேள்விக்கு இன்று பதில் சொல்லுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது என்னவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : It has been postponed. As soon as the answer is ready it will be placed before the House.

* SRI D. S. AUTHIMOOLAM : On a point of order, Sir. 800-வது கேள்விக்கு பதில் சொல்லும்போது ஆளும்பண்ணை என்ற ஊரே இல்லை என்று சொன்னார்கள். அது சரிதான். இதற்கு இந்த மாதிரி ஊரே இல்லை என்று தகவல் கொடுக்கவேண்டுமா ? சபாநாயகர் அவர்கள் அந்த அங்கத்தினருக்கு ஒரு லெட்டர் எழுதி சரியான பெயர் என்ன என்று கேட்டு அவர் அனுப்பியதும் அந்தக் கேள்வியை சீர் திருத்தக் கூடாதா ? இந்த மாதிரி செய்தால் சட்ட சபையின் காலம் வீணாகாமல் இருக்கும். இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : கேள்வி ஸ்பீக்கரைக் கேட்கவில்லை. நான் எப்படி திருத்தம் செய்ய முடியும் ? கேள்வியை மந்திரி அவர்களுக்கு அனுப்பினேன். மந்திரி அவர்கள் பதில் அனுப்பினார்கள். மந்திரி அவர்கள் அனுப்பிய பதிலைச் சபையின் முன் வைத்தேன். ஆகையால் பாய்ண்ட் ஆப் ஆர்டரைத் தள்ளி விடுகிறேன்.

MR. SPEAKER : Questions are over.